[1993 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 134, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

134—

மேட்டுப்பாளையம் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனையில் படுக்கை வசதி ஏற்படுத்தல்.

*14238— செல்வி எல்சுலோசனா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனையில் படுக்கை வசதி ஏற்படுத்தி உள்நோயாளிகள் பயன்பெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தில் தொழிலாளர் நல அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஏதும் இல்லை. தற்போது அங்கே 2 தொழிலாளர் நல அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. மேட்டுப் பாளையம் 1-ல் 2146 ஈட்டுறுதி தொழிலாளர்களும், மேட்டுப்பாளையம் 2-ல் 1381 ஈட்டுறுதி தொழிலாளர்களும் பயன்பெற்று வருகின்றனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தினுடைய அளவுகோல்படி 12,500-க்கு குறையாத ஈட்டுறுதி தொழிலாளர்கள் இருக்கும் பகுதியில் 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதி மருத்துவமனை திறக்கலாம். மேட்டுப் பாளையத்திலுள்ள இரு மருந்தகங்களிலும் 3,527 ஈட்டுறுதி தொழிலாளர்கள் மட்டுமே உள்ளதால் இப்பகுதியில் உள் நோயாளிகள் பயன்பெற படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனை கட்ட இயலாத நிலை உள்ளது.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக தற்போது மேட்டுப் பாளையத்தில் தொழிலாளர் நல அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக நிலம் கையகப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.